
விலை: 50.00
பக்கங்கள்: 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 344 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை (28.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் நினைவேந்த
# மாவீரர் துயிலுமில்லங்கள் கண்ணீரால் நனைந்தன




(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களின் உரிமைக்காக போராடி தமது இன்னுயிர்களை நீத்த வீரமறவர்களின் நினைவேந்தல் நேற்று உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. தமிழர் தாயகத்தில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் நினைவேந்த மாவீரர் துயிலுமில்லங்கள் அனைத்தும் கண்ணீரால் நனைந்தன.



15ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரன் படம் - புலிக்கொடி
### கொடிகாமத்தில் பரபரப்பு




(கொடிகாமம்)
தலைவர் பிரபாகரன் படம் - புலிக்கொடி பொறித்த ரீசேட்டுடன் வந்த இளைஞனால் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.
கொடிகாமம் மாவீரர் துயிலும் 15

## தரவை துயிலுமில்லத்தில் பொலிஸார் அராஜகம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு - தரவை துயிலுமில்லத்தில் நேற்று கடும் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.
கார்த்திகை 27ஆம் திகதியான நேற்று உரிமை கோரி 15

## தமிழர் தாயகத்தில்
# மாவீரர்களை நினைவேந்த நீதிமன்றங்கள் அனுமதி
### பொலிஸாரின் மனுக்கள் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)
மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை கோரி வடக்கு, கிழக்கு உள்ள நீதிவான் நீதிமன்றங்களில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று நிராகரிக்கப்பட்டன.
பொதுச் சுகாதாரத்துக்கும் பொது மக்கள் பாதுகாப்புக்கும் பங்கமில்லாமல் உயிழந்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தலாம் என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் யாழ்.நீதவான் 15




நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை கடற்கரையில் அஞ்சலி




முல்லைத்தீவு கடற்கரையில் மாவீரர்களுக்கான நினைவேந்தல் நேற்று நடைபெற்றபோது.

# முதல் மாவீரர் சங்கரின் நினைவிடத்தில் அஞ்சலி



வல்வெட்டித்துறை கம்பர் மலையில் உள்ள தமிழீழ விடு தலைப்புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கரது நினை வாலயம் முன்பாக மாவீரர் நினைவேந்தல் இடம்பெற்றது.

மாவீரர்களின் உறவுகள் கலந்துகொண்டு சுடரேற்றி அக வணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர். (ம-7)

## பண்டிவிரிச்சானில் மாவீரர்களுக்கு நினைவேந்தல்



## விக்னேஸ்வரன் எம்.பி அலுவலகத்தில் நினைவேந்தல்



## மாவீரர்களுக்கு லண்டனிலும் அஞ்சலி




**மலிவு விற்பனை**

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7740)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**


# பத்திரிகை ஆசிரியர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபா கரன் தொடர்பான செய்தியை வெளியிட்டமைக்காக "உதயன்" பத்திரிகையின் ஆசிரியர் த.பிர பாகரன் மாவீரர் தினமான நேற் றுப் 27ம் திகதி பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவி னரால் 4 மணி நேரம் கடுமை யான விசாரணைக்கு உட்படுத் தப்பட்டார்.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி வெளியான "உதயன்" பத்திரிகையில் தமி ழீழ விடுதலைப் புலிகளின் தலை வர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பாக வெளியான செய்தி தொடர்பிலேயே பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் பத்திரிகை ஆசிரியரி டம் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

இவ் விசாரணைக்காக இவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டி ருந்தார். (ம-7)

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 - 11 - 1955

மறைவு 24 - 11 - 2023

### திருமதி றாகினி தவேந்திரன்

**( ஓய்வுநிலை ஆசிரியை )**

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி றாகினி தவேந்திரன் அவர்கள் கடந்த 24.11.2023 (வெள்ளிக் கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதி யரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான தங்கவடிவேல் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் தவேந்திரன் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/ மீசாலை வீரசிங்கம் ம.கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் செந்தியா, றஜீதன், தனீஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜதீஷன், றஜீதா ஆகியோரின் மாமியாரும் தருண், ஆரவ், ஸ்ரீனிகா, மேதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மாலினி, சுபாசினி, நளாயினி, உதயகுமார், சிறீதரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுரேந்திரன், மகேந்திரன், சியாமளாதேவி, இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.11.2023) செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"உதய தாரகை"
மீசாலை மேற்கு, மீசாலை.
077 910 3340 (18025)

த.தவேந்திரன் (கணவர் )
பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 07 . 10 . 1930

இறப்பு 25 . 11 . 2023

### கந்தர் நடராசா

வடமராட்சி வதிரியைப் பிறப்பிடமாகவும் தென்மராட்சி கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் நடராசா அவர்கள் கடந்த 25.11.2023 (சனிக்கிழமை) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற "செல்வரத்தினம்" அவர்களின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன், கருணாவதி, பிறேமாவதி, லீலாவதி, ஜெயகாந்தன், புஸ்பவதி, மாலாவதி, சந்திரகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் நாளை (29.11.2023) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"செல்வ வாசா"
கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி. (18030)

தகவல் - குடும்பத்தினர்
077 826 9846,
075 832 1990, 077 666 0699

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தாயகத்தில் மாவீரர் நினைவேந்தல்கள்...


யாழ். பல்கலையில்...


முள்ளியவளையில்...


யாழ். நல்லூரில்...


கொடிகாமம்...


கோப்பாய்...



கிளிநொச்சியில்...


துணுக்காய் ஆலங்குளம்...


மன்னார் ஆட்காட்டிவெளி...



தீவகம் சாட்டி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறையில் துயிலும் காவிய நாயகர்க்கு மனமுருகி மலர்தூவி அஞ்சலித்த கணங்கள்



யாழ்.பல்கலைக்கழகம்


நல்லூர்


பருத்தித்துறை






மாவீரர் நாள் - 2023
கனகபுரம் துயிலும் இல்லம்


மாவீரர் நாள் - 2023
கனகபுரம் துயிலும் இல்லம்


கோப்பாய்


தேராவில்


விசுவமடு


மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை இலக்காகக் கொண்டு கைகோர்க்கவுள்ள கூட்டணி



(கொழும்பு)


எதிர்வரும் பொதுத்தேர்தலை இலக்காகக் கொண்டு புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் பணியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னிலை வகித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இணைந்து சில காலங்களுக்கு முன்னர் ஸ்தாபித்த கதிரை சின்னத்துடனான பொது முன்னணியை புத்துயிர் பெற நடவடிக்கை எடுக்க பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக சந்திரிகா பண்டாரநாயக்காவை நியமித்து, கட்சியின் தலைமைப் பொறுப்பை மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கூட்டணியின் தலைமைத்துவத்தை சந்திரிகாவிடம் வழங்குவதற்கு ஸ்ரீலங்கா கட்சியின் ஒரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்த வெளியீடு சற்று தாமதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (5-6)

# காலநிலை மாற்றத்தால் கடற்கரைகளில் அதிக மீன்கள்




(கொழும்பு)

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் அதிகளவான கீரி மீன்கள் பிடிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்வாறு பிடிக்கப்படும் கீரி மீன்கள் கிலோவொன்றுக்கு 300 முதல் 400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளவால், வளையா, சூரை போன்ற மீன்களும் அதிகளவில் பிடிக்கப்படுவதாகவும் இதன்படி வளையா மீன் 1 கிலோகிராம் 1800 ரூபாய்க்கும் கிளவால் 1 கிலோகிராம் 2000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)



கரணவாய் ஸ்ரீ அபய சீரடி சாயிநாதர் ஆலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை தீபத்திருநாளை முன்னிட்டு பக்தர்கள் தீபங்களை ஏற்றி வழிபட்டனர். (படம்:-மகாலிங்கம்)

# டிசெம்பர் 4 ஆம் திகதி முதல் மாணவர்களுக்கான வவுச்சர்

## கல்வி அமைச்சர்



(கொழும்பு)

காலணி வவுச்சர் விநியோகம் டிசெம்பர் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட சபை உறுப்பினர் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுச்சர் விநியோகம் எதிர்வரும் 27ஆம் திகதி நிறைவடையும் என்றும் 740,000 சிறார்களுக்கு வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இதற்காக மிகவும் கஷ்டமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (5-6)

# இராசிபலன்

28.11.2023
கார்த்திகை 12, செவ்வாய்க்கிழமை
பிரதமை பிற்பகல் 2.43 மணிவரை
ரோகினி பிற்பகல் 2.36 மணிவரை

சுபநேரம் -10.43-12.13 மணிவரை
இராகுகாலம்-3.13-4.43 மணிவரை
விநாயக விரதாரம்பம், அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்- சுவாதி, விசாகம்.

வளவன்

**மேஷம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கலாம்.

**மிதுனம்** புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம், வியாபாரத்தில் சிறு மாற்றம் செய்ய முற்படுவீர்கள்.

**கடகம்** அதிஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், தூர தேசப் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சிறப்பான நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், பொறுமையால் வெற்றி காண வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்** இரவு-பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**தனுசு** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், உடல் நலன் சீராகும்.

**மகரம்** மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், மனம் குளிரும் செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு, இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

ஆசையின் வேட்கையை அடக்கவும் முடியாது. தீர்த்து வைக்கவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த புதிய செயலி அறிமுகம்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள விவசாயிகள் மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வோர், உற்பத்திகளுக்கான நியாயமான விலையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் 'FARM TO GATE' என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் பிஎஸ்.எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கு அமைய குறித்த செயலிக்கான மென்பொருள் வடிவமைப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தை மாதம் FARM TO GATE செயலியை அங்குரார்ப்பணம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த செயலி ஊடாக விவசாயிகளிடமிருந்து, நுகர்வோர் நேரடியாக தங்களுக்கு தேவையான உற்பத்திகளை மொத்தமாகவோ அல்லது சில்லறை விலையிலோ கொள்வனவு செய்ய முடியும்.

அத்துடன் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை பெற்றுக் கொள்ளவும் மரக்கறிகள், பழங்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்களை காலாவதியாகும் முன்னர் விற்பனை செய்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் அனைத்தையும் துறைசார் திணைக்களங்களின் கிராமிய மட்ட அலுவலர்கள் மேற்பார்வை செய்ய உள்ளதோடு விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# தீப்பற்றிய மின்வடம்



(அராலி)

கோப்பாய் இராச பாதை பகுதியில் மின்வடத்தில் திடீரென ஏற்பட்ட தீயினால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

கோப்பாய் இராச பாதையில் உள்ள இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மின் கம்பத்துக்கு அருகில் தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றில் உள்ள மரம் ஒன்றின் கிளைகள் குறித்த மின்கம்பத்துடன் உரசிய நிலையில் திடீரென காற்று வீசிய நேரம் குறித்த மரமானது அசையும் போது குறித்த பகுதியில் மின்ஒழுக்கு ஏற்பட்டதோடு குறித்த மின்வடத்தில் தீப்பரவல் ஏற்பட்டது.

குறித்த பகுதியில் உள்ளவர்கள் உடனடியாக இலங்கை மின்சார சபையினருக்கு அறிவித்ததன் காரணமாக குறித்த அனர்த்தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

அதேவேளை குறித்த மின் கம்பத்தில் ஏற்பட்ட தீயினால் அப்பகுதியில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதோடு பிரதான மின் இணைப்பு வயர்கள் சேதமடைந்து பின்னர் இலங்கை மின்சார சபை ஊழியர்களினால் அவை மீள இணைக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (5-6-33-104)

# வவுனியாவில் யானை ஒன்று சடலமாக மீட்பு



(குருமன்காடு)

வவுனியா, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் யானை ஒன்றின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

பன்றிக்கெய்தகுளம் பகுதியில் உள்ள காணியொன்றில் யானையின் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த காணியின் உரிமையாளர் இது தொடர்பில் ஓமந்தை பொலிஸார் மற்றும் கிராம சேவையாளருக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன், வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

குறித்த யானை மூன்று நாட்களிற்கு முன்பாகவே உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-6-250)

# அளம்பில் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் கொடிகள் அறுப்பு

(முல்லைத்தீவு)




முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் வீதி ஓரத்திலே கட்டப்பட்டிருந்த சிவப்பு, மஞ்சள் கொடிகளை பொலிஸார் அகற்றிய நிலையில் அங்குள்ள மக்கள் ஆத்திரமடைந்து பொலிஸாருடன் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகளைச் செய்த போது வர்த்தக நிலையத்திற்கு முன்பாக கொடிகளைக் கட்டி விளக்குகள் வைக்க வேண்டாம் என ஏற்பாட்டாளர்களுடன் வர்த்தக நிலைய உரிமையாளர் முரண்பட்ட நிலையில் கைகலப்பாக மாறியது.

இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் இரண்டு தரப்பினைச் சேர்ந்தவர்களிலும் சிலரை பொலிஸ் நிலையம் அழைத்து சென்றதோடு குறித்த இடத்தில் இருந்த சிவப்பு, மஞ்சள் கொடிகளை பொலிஸார் அகற்றியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். (5-6)

# வவுனியாவில் வீட்டினுள் நுழைந்து திருட முற்பட்ட நபர் மடக்கிப்பிடிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் வீட்டினுள் நுழைந்து திருடமுற்பட்ட நபர் ஒருவரை மடக்கிப் பிடித்த சுகாதார பரிசோதகர் அந் நபரை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் வவுனியா, தாண்டிக்குளம், சோயா வீதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா, தாண்டிக்குளம், சோயா வீதி பகுதியில் உள்ள குறித்த வீட்டிற்குள் திருடன் ஒருவன் நுழைய முற்பட்டதை வீட்டின் உரிமையாளரான சுகாதார பரிசோதகர் அவதானித்துள்ளார்.

இதனையடுத்து சுதாகரித்துக் கொண்ட சுகாதார பரிசோதகரும் அவரது குடும்பத்தினரும் திருடனை மடக்கிப்பிடித்து மரத்துடன் கட்டி வைத்து நையப்புடைத்துள்ளனர்.

பின்னர் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதுடன், திருடனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த சம்பவத்தில் திருடன் கத்தியால் தாக்கியதில் சுகாதார பரிசோதகருக்கும் அவரது சகோதரர் ஒருவருக்கும் சிறுகாயம் ஏற்பட்டுள்ளதையடுத்து அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட நபர் மீது நீதிமன்றில் வேறு வழக்குகளும் நிலுவையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-6-250)

# ஒட்டுசுட்டான் விமானத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் நினைவேந்தல்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் விமானப்படையினரின் தாக்குதலில் உயிரிழந்த 12 அப்பாவிப் பொதுமக்களின் 33 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

1990 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் சந்திப் பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வினை நினைவிற் கொள்ளுவதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருந்த வேளை, இலங்கை விமானப் படையினர் குண்டுத் தாக்குதல் நடத்தியதில் 12 பொதுமக்கள் உயிரிழந்தார்கள்.

குறித்த மக்களின் 33 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு தாய்த் தமிழ் உறவுகள் நினைவேந்தல் அமைப்பு மற்றும் தாய்தமிழ்பேரவையின் ஒழுங்கமைப்பில் நினைவுகூரப்பட்டது. (5-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைக்கடிகாரத்துக்குள் வைத்து போதைப்பொருள் கடத்தல்

## சந்தேகநபரொருவர் கைது

(கொழும்பு)

ஒலுபொடுவ பிரதேசத்தில் சந்தேகநபர் ஒருவர் கைக்கடிகாரத்தின் பின் அட்டையினுள் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்ததமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஒருவர் ஹெரோயின் பொதிகளை கொண்டு செல்வதாக மொரகஹஹேன பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதிக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேகநபரை கைது செய்து தீவிர சோதனைக்கு உட்படுத்திய போது கைக்கடிகாரத்தின் பின் அட்டையை அகற்றிய போது, மூன்று போதைப்பொருள் பொதிகள் கவனமாக பொதி செய்யப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டுபிடித்ததாக தெரிவித்துள்ளனர்.

பன்னிபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 33 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் பல்வேறு பகுதிகளுக்கு போதைப்பொருள் பொதிகளை விநியோகித்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் ஹொரணை நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளதுடன் மொரகஹஹேன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-6)

# அடக்குமுறைக்கு எதிராக மக்கள் வீறுகொண்டு எழுவார்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம்

(மட்டக்களப்பு)

**அடக்குமுறைக்கு எதிராக மக்கள் வீறுகொண்டு எழுவார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**



மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "இப்போது போர் துப்பாக்கிச் சத்தங்கள் இல்லையே ஒழிய அதேபோல் ஒரு சூழலில் தான் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மாவீரர் தின நினைவேந்தல் பயங்கரவாத தடைச்சட்டத்தில் அடக்க நினைக்கின்றனர்.

நாங்கள் இதை எதிர்பார்க்க வேண்டும். ஆனால் பின்நோக்கி போக முடியாது.

போர் முடிந்துவிட்டது சகல விடயங்களை செய்ய முடியும் என எதிர்பார்க்க முடியாது. போர், துப்பாக்கி சத்தங்கள் இல்லையே ஒழிய அதேபோல் சூழலில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ஆகவே இதனை எதிர்பார்த்து எதிர்த்து செயற்படுகின்ற, மண்ணுக்காக உயிர்த்தியாகம் செய்கின்ற அத்தனை பேருக்கும் நாங்கள் செய்கின்ற கைமாறு அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது. ஆகவே இந்த விடயத்தில் நாங்கள் பின்நோக்கி போக முடியாது" எனத் தெரிவித்தார். (5-6)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

**வரவு செலவுத் திட்டம் - 2024**

நகரசபை கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1939ஆம் ஆண்டின் 255 ஆம் அத்தியாயமான 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத் திட்டம் 2023.11.29 ஆம் திகதி தொடக்கம் ஏழு (07) நாட்களுக்கு அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகம், சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய மூன்று பொதுநூலகங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

2023.11.28 (சி-7736)

# பொலிஸ் சேவையில் 20,000 வெற்றிடங்கள்

## பொதுப்பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

பொலிஸ் சேவையில் சுமார் 20,000 வெற்றிடங்கள் காணப்படுவதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு வெற்றிடங்களுக்கு சுமார் 5,000 புதிய அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் இது தொடர்பான நடவடிக்கைகள் அடுத்த வருடத்தின் முதல் பாதியில் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். (5-6)

அன்பு வாசகர்களே!
உங்கள் வலம்புரி
இப்போது...
இல. 191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரியில் இயங்குகிறது.
(யாழ். பிறவுண் வீதியில் அரசடிச் சந்திக்கும் கலட்டி சந்திக்கும் இடையில்)
மேலதிக தொடர்புகளுக்கு
076 097 3121
021 222 3378

## கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு
## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்(வ-து)

வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்

காலம்:- 10.12.2023
நேரம்:- 10.30 மணி

இடம் :- கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபம்

**நிகழ்ச்சி நிரல்**

- மௌன இறைவணக்கம்
- மங்கள விளக்கேற்றல்
- தலைமையுரை
- நிகழ்ச்சிநிரல் அங்கீகரித்தல்
- சென்ற பொதுச்சபைக் கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
- செயற்பாட்டறிக்கை சமர்ப்பித்தல்
- எண்பார் அறிக்கை சமர்ப்பித்தல் (2018,2019,2020)
- உத்தேச வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பித்தல்(2024)
- பிரேரணைகள்
- விருந்தினர் உரை
- நன்றியுரை

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்,
கரவெட்டி கால்நடை வளர்ப்போர்,
கூட்டுறவுச்சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# சுமூகமான நிலைக்கு திரும்பும் இந்திய - கனடா உறவு

### சஞ்சய் குமார் வர்மா



(டில்லி)

இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான உறவுகள் மீளவும் சுமூக நிலைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளதாக கனடாவிற்கான இந்திய உயர்ஸ்தானிகர் சஞ்சய் குமார் வர்மா தெரிவித்துள்ளார்.


சில மாதங்களுக்கு முன்னதாக இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான ராஜதந்திர முரண்பாட்டு நிலை நீடித்தது. எனினும் தற்பொழுது உறவுகள் ஓரளவு சுமூக நிலைக்கு திரும்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சீக்கிய மதத் தலைவர் ஹாா்தீப் சிங் நிஜார் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாட்டு நிலை உருவானது.

இந்தப் படுகொலையின் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருந்தது. இதனைத் தொடர்ந்து நாடுகளுக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகளில் கடுமையான விரிசல் நிலைமை ஏற்பட்டது.

முரண்பாட்டு நிலையை தீர்த்து சுமூகமான நிலையை உருவாக்கும் வகையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உயர்ஸ்தானிகர் வர்மா தெரிவித்துள்ளார். (5-6)

# திருப்பதி ஏழுமலையானை தரிசித்த பிரதமர் மோடி



(டில்லி)

திருப்பதி திருமலை கோயிலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று காலை வழிபாட்டில் ஈடுபட்டார்.

ஹைதராபாத்தில் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் தெலங்கானா மாநிலத்திற்குச் சென்றுள்ளார்.

அதனைத் தொடர்ந்து நேற்று காலை திருப்பதி திருமலை தேவஸ்தானத்தில் சிறப்பு வழிபாடு செய்த அவருக்கு கோயிலில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. (5-6)

# பிரேசிலில் இனங்காணப்பட்ட புதிய டைனோசர் இனம்

(பிரேசிலியா)

பிரேசிலில் கால்தடங்கள் மூலம் புதிய டைனோசர் இனத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பிரேசிலின் அரராகுவாரா நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கால்தடங்களை விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

இதில் பார்லோவிச்னஸ் ரேபிடஸ் என்று அழைக்கப்படும் புதிய டைனோசர் இனம் கண்டறியப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இது 60 முதல் 90 செ.மீ (2 முதல் 3 அடி) உயரம் கொண்ட ஒரு சிறிய மாமிச விலங்கு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



பர்லோவிச்னஸ் ரேபிடஸ் ஒரு சிறிய, வேகமான மாமிச உண்ணி ஆகும்.

இது சுமார் 12.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்துள்ளது என்றும் தெரிவித்தனர். (5-6)

# சியரா லியோனில் இ...

# இராணுவ முக...

## பதற்றநிலையா...

(பிறீவுடன்)

**ஆயுதமேந்திய குழுவொன்று ... புகுந்து கைதிகளை விடுவித்தன... மேற்கு ஆபிரிக்க நாடான சியரா ... ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்...**




# கிரீஸில் கடும்புயல் கடலில் கவிந்த கப்பல்

## 12 பேர் மாயம்

(எத்தன்ஸ்)

கிரீஸ் நாட்டில் கடும் புயலில் சிக்கி சரக்குக் கப்பல் ஒன்று கடலில் கவிழ்ந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்ததோடு 12 பேர் மாயமாகியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. கிரீஸ் நாட்டில் அலெக்சாண்ட்ரியா துறைமுகத்தில் இருந்து இஸ்தான் புல்லுக்கு 6 ஆயிரம் தொன் உப்புகளை ஏற்றிக் கொண்டு சரக்குக் கப்பல் லெஸ்போஸ் தீவு அருகே சென்று கொண்டிருந்த போது அதன் தொடர்பு திடீரென துண்டிக்கப்பட்டது.

கடும் புயலில் சிக்கி அந்த கப்பல் கடலில் கவிழ்ந்ததில் கப்பலில் 8 எகிப்தியர்கள், 4 இந்தியர்கள், 2 சீரியாவைச் சேர்ந்தவர்கள் என 14 பேர் இருந்தனர்.


இதில் எகிப்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் மட்டும் உயிர் தப்பிய நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றவர்கள் கதி என்னவென்று தெரியவில்லை. உயிரிழந்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என இன்னும் உறுதிப்படுத்தவில்லை. மாயமான 12 பேரையும் தேடும் பணியில் கிரீஸ் நாட்டு கடலோர காவல் படையினர் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ில் ஆயுதக்குழுவொன்று ...முகாம் மீது தாக்குதல்

## ...யால் ஊரடங்கு அமுல்

...ன்று சிறைக்குள் ...வித்ததை அடுத்து சியரா லியோனில் ...ிக்கப்பட்டுள்ளது.





ஆயுதமேந்திய குழுவினால் ஏற்படுத்தப்பட்ட அமைதியின்மையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆயுதமேந்திய குழுவொன்று சிறைக்குள் புகுந்து கைதிகளை விடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு வசதிகள் இருந்தும் கைதிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை விடுவிக்கப்பட்டதாக மேற்கு ஆபிரிக்க நாட்டின் தகவல் தொடர்பாடல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சியேராலியோன் தலைநகரில் உள்ள இராணுவ முகாம் மீது ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மத்திய சிறையில் இருந்து பெருமளவான கைதிகள் தப்பியோடியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், தப்பியோடிய கைதிகளின் எண்ணிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், நிலைமைகளை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரும் வகையில் நாடு முழுவதும் சியரா லியோனி அரசாங்கம் ஊரடங்கு உத்தரவை பிறப்பித்துள்ளது. (5-6)

# பாகிஸ்தான் தீ விபத்தில் 11 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பல அடுக்கு மாடிகளைக் கொண்ட வணிக வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டதால் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் நாட்டின் கராச்சியில் உள்ள ரஷித் மின்ஹஸ் வீதியில் பல அடுக்குமாடிகளைக் கொண்ட வணிக வளாகம் அமைந்துள்ளது.

இந்த வணிக வளாகத்தில் நேற்று முன்தினம் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



இந்த தீ விபத்தில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# விமான விபத்தில் 4 பேர் உயிரிழப்பு

## ஆஸ்திரியாவில் சம்பவம்



(வியன்னா)

மேற்கு ஆஸ்திரியாவில் உள்ள பகுதியொன்றில் சிறிய ரக விமானம் விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் க்ரூனாவ் இம் அல்ம்டல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்த 4 பேரையும் உடனடியாக அடையாளம் காண முடியவில்லை.

விபத்துக்கான காரணமும் இன்னும் அறியப்படாத நிலையில் விபத்து குறித்தும் உயிரிழந்தவர்கள் யார் என்பது குறித்தும் ஆஸ்திரிய பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (5-6)

## உக்ரைனின்

# பதிலடித் தாக்குதலை முறியடித்த ரஷ்யா



(மொஸ்கோ)

ரஷ்யாவின் மொஸ்கோவை குறிவைத்து உக்ரைன் நடத்த முயன்ற ட்ரோன் தாக்குதல்களை முறியடித்ததாக ரஷ்ய பிராந்திய ஆளுநர் ஆண்ட்ரே வோரோபியேவ் தெரிவித்துள்ளார்.

ட்ரோன் தாக்குதல்களால் மூன்று கட்டடங்கள் சேதமடைந்ததாகவும் இதில் யாருக்கும் காயம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கீவ் நகரத்தை இலக்குவைத்து ரஷ்யா நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஆனாலும், மொஸ்கோ பிராந்தியத்தில் 24 ட்ரோன்களை ரஷ்ய வான் பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மொஸ்கோவிலிருந்து 180 கி.மீ தொலைவில் உள்ள டுலா நகரில் 12 மாடிக் குடியிருப்பில் ஒரு ட்ரோன் தாக்கியதாகவும் இதில் சிலர் காயமடைந்ததாகவும் ஆண்ட்ரே வோரோபியேவ் கூறியுள்ளார்.

ட்ரோன் தாக்குதல் அபாயம்-கருதி மொஸ்கோவில் உள்ள இரு விமான நிலையங்கள் சிறிது நேரம் மூடப்பட்டு பின்னர் இயங்கத் தொடங்கியதாக ரஷ்ய அரச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

நாட்டின் வங்குரோத்து நிலை முடிவுக்கு வந்துள்ளதால், தடைப்பட்டுள்ள அபிவிருத் தித் திட் டங் களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவான "உறுமய" தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்ச்சியின் முதல் கட்டம் அநுராதபுரம், நொச்சியாகமவில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்துள்ளார். நாட்டின் ஒவ்வொரு கிராமத்தையும் தொழில் முயற்சி கிராமமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். அமேலும் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக விவசாய நவீனமய மாக்கல் சேவை நிலையங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என ஜனாதிபதி தெரிவித்தார். (5-6)

# 74 மின் இணைப்புகளுக்கான கொடுப்பனவுகள் நிலுவையில்

(கொழும்பு)

74 மின் இணைப்புகளுக்கான கொடுப்பனவுகள் செலுத்த தவறியுள்ளதுடன் 29 இணைப்புகள் தொடர்பான 5 மில்லியன் ரூபாய் பணம், 6 வருடங்களாக அறவிடப்படவில்லை எனவும் மேலும் 30 இணைப்புகள் தொடர்பான 3 மில்லியன் ரூபாய் பணம் ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்படவில்லை எனவும்தகவல்வெளியாகியுள்ளது.

2022ஆம் ஆண்டு தொடர்பான கணக்காய்வாளர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான மின்சார விநியோகத்திற்காக கடந்த வருட இறுதிக்குள் அறவிடப்பட வேண்டிய 16 மில்லியன் ரூபாய் பணம் செலுத்தத் தவறியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான பொறியியல் கொடுப்பனவுகள், ஊக்குவிப்புக்கள் மற்றும் தற்காலிகக் கொடுப்பனவுகள் என்பனவற்றிற்காக முறையான அனுமதியின்றி 418 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் எரிபொருள் கொள்வனவு தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட ஹெஜிங் கொடுக்கல் வாங்கல் காரணமாக கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி வரை 14,028 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. (5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 380 | 340 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 650 | 700 |
| தக்காளி | 400 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 150 |
| கோவா | 400 | 380 | 350 |
| கரட் | 350 | 400 | 400 |
| பூசணி | 120 | 100 | 100 |
| புடோல் | 250 | 200 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 280 |
| பாகற்காய் | 650 | 500 | 500 |
| வெண்டக்காய் | 250 | 220 | 180 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 800 | 650 | 600 |
| லீக்ஸ் | 400 | 280 | 300 |
| பீற்றூட் | 350 | 300 | 300 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 700 | 900 | 600 |
| போஞ்சி | 650 | 700 | 500 |
| கத்தரிதம்பள்ள | 350 | 300 | 350 |
| கீரை – 1 பிடி | 150 | 100 | 150 |
| தேசிக்காய் | 1500 | 1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 |
| இராசவள்ளி | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | — | - |
| முள்ளங்கி | 120 | 200 | - |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 |
| வல்லாரை | 50 | 180 | 50 |
| ஈரப்பலா | 200 | 200 | 120 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2977

### லிங்கா

என் கோவம் கூட தவுடு பொடியாக போய் விடும் உன் அழகான பேச்சில்




அவ பேசும் போது மட்டும் உன் கோவம் தவுடு பொடியா போகும். நான் பேசும் போது மட்டும் மூக்கு பொடியா போகுதோ...

### நதீஸ்

சின்னச் சின்ன ஆசை. வெண்ணிலவு தொட்டு முத்தமிட ஆசை. என்ன இந்த பூமி சுற்றி வர ஆசை.



இது சின்னச் சின்ன ஆசையா?


### தர்சிகன்

கல்யாணம் ஆகிட்டா லைவ்ஸ்டெயில் மாறிடும்ன்னு சொன்னாங்க. ஆனால் அப்புறம் தான் தெரிஞ்சது ஹேர் ஸ்ரைலக் கூட மாத்த முடியாதென.



### மாதுரி

ஊசியும் மனிதர்களும் மிகவும் ஒற்றுமையானவர்கள். கோர்த்து விடுவதிலும் குத்திக் காட்டுவதிலும்.



### கோபினா

எதுக்குடா அவன அடிச்சே? ஆறு வருஷத்துக்கு முன்ன என்ன தேவாங்குன்னு சொன்னான். அதுக்கு இப்போ ஏன் அடிக்கிறே? நான் இன்னைக்கு தான் தேவாங்க பாத்தேன்.



### கஸ்தூரி

ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பது எப்படின்னு ஒரு புக் பணம் கட்டி ஒன்லைன்ல ஓர்டர் பண்ணேன். 3 வாரம் ஆயிடுச்சு இன்னும் வரல. வாழ்க்கை நாடகமா?



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேசத்துக்கென வெளியுறவுக் கொள்கை வேண்டும்

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

(லண்டன்)

**ஈழத் தமிழர் தேசத்துக்கென நன்கு வடிவமைக்கப்பட்ட வெளியுறவுக் கொள்கை வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.**

தமிழீழத் தேசிய மாவீரர் நாள் ஊடகச் செய்தியினை நேற்று வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,தாயகத்தையும் புலம் பெயர் மக்களையும் இணை த்து ஓர் அரசியல் உயர் பீட மொன்றை அமை க்கும் வாய் ப்புக்கள் குறித்து கவனம் கொள் ளுமாறு இன்றைய மாவீரர் நாளில் அழைப்பு விடுக்கி றேன்.

ஈழத்தமிழர் தேசத்தை ஒரு வலுமையமாக மாற்றுவதா யின் உலக நாடுகளுடன் தொட ர்புகளைப் பேணிச் செயற்பட வேண்டும். இதற்கு ஈழத் தமி ழர் தேசத்துக்கென நன்கு வடி வமைக்கப்பட்ட வெளியுறவுக் கொள்கை வேண்டும். மேலும் ஜனநாயக ரீதியில் பொதுவாக் கெடுப்பொன்றை ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் நடத்தின் உண்மை வெளிப்படும் என் பதை நாம் சுட்டிக்காட்டுகின் றோம்.

இவ் அரசியல் இலக்கை தொலைநோக்காகக் கொண்ட நமது மக்கள் சட்டக்காரண ங்களுக்காக ஈழத்தாயக த்தில் சமஷ்டி வடிவத்தில் தங்கள் அரசியல் கோரிக்கையை முன் வைக்கிறார்கள்.

புலம்பெயர்ந்த நாடு களில் இது தமிழீழத் தனிநாட்டு க்கான கோரிக்கையாக வெளிப் படுகிறது என அதில் குறிப்பிட ப்பட்டுள்ளது. (5-6)


# சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்கள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவார்கள்

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படும் வரையில் 9 மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதி பர்கள் வழமை போன்று மக்கள் பாதுகாப்பு நடவடி க்கைகளை மேற்கொள் வார்கள் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரி வித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி விக்கிரமரத்ன கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி பொலிஸ்மா அதிபர் பதவி யிலிருந்து ஓய்வு பெறவிரு ந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ ருக்கு நான்கு தடவைகள் சேவை நீடிப்பு வழங்கினார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன கடந்த



வெள்ளிக்கிழமை தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

இதற்கமைவாக புதிய பொலிஸ்மா அதிபர் நிய மிக்கப்படும் வரையில் 9 மாகாணங்களுக்கு நிய மிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிப ர்கள் வழமை போன்று மக்கள் பாதுகாப்பு நடவடிக் கைகளை மேற்கொள்வார் கள் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல் துவ தெரிவித்துள்ளார்.(5-6)

# 154 கோடி அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு முதலீடாக கிடைத்துள்ளது

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில், 154 கோடியே 70 இலட்சம் அமெரிக்க டொலர் வெளி நாட்டு நேரடி முதலீடாக கிடைக்கப்பெற்றுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள் ளது.

ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் கலந்து கொண்ட முதலீட்டு ஊக்குவிப்பு இரா ஜாங்க அமைச்சர் திலும்



அமுனுகம இதனைத் தெரி வித்துள்ளார்.

இதுதவிர உள்நாட்டு முதலீட்டாளர்கள் குறித்த காலப்பகுதியில், 25 கோடியே 80 இலட்சம் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளனர்.

அத்துடன், கடந்த வரு டத்தில் நாட்டில் பல பாத கமான சூழ்நிலை ஏற்பட்ட போதிலும் வெளிநாட்டு முத லீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமாக இருப்பதனை குறித்த புள்ளி விபரங்கள் வெளிப்படுத் துவதாக இராஜாங்க அமை ச்சர் திலும் அமுனுகம தெரி வித்தார். (5-6)

# நாட்டில் அதிகரிக்கும் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை

(கொழும்பு)

நாட்டில் கடந்த 10 மாத ங்களில் மாத்திரம் 1,250 தொழுநோயாளர்கள் இண ங்காணப்பட்டுள்ளதாக சுகா தார அமைச்சு தெரிவித்து ள்ளது.

குறித்த தொழுநோயா ளர்களில் 14 வயதுக்குட்பட்ட 131 சிறுவர்கள் அடங்கு வதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 256 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 138 பேரும் மட்டக்களப்பில் 128 பேரும் களுத்துறையில் 92 பேரும் அடையாளம் காண ப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், அடை யாளம் காணப்பட்டுள்ள தொழுநோயாளர்களில் 50 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்த வர்கள் என சுகாதாரத்துறை சுட்டிக்காட்டியுள்ளது. (5-6)

# நுரைச்சோலை மின்நிலைய மின்பிறப்பாக்கி செயலிழப்பு

(கொழும்பு)

பராமரிப்பு பணிகள் கார ணமாக, நுரைச்சோலை லக் விஜய அனல் மின் நிலை யத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி தற்போது செய லிழந்துள்ளது.

இந்த மின்பிறப்பாக்கி நாளை புதன்கிழமை தேசிய மின்கட்டமைப்புடன் இணை த்துக் கொள்ளப்படும் என இல ங்கை மின்சார சபை தெரி வித்துள்ளது.

அத்துடன், அண்மையில் செயலிழந்த நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்க மேலும் 14 நாட்கள் தேவை ப்படும் என அந்த சபை தெரிவித்துள்ளது.

இதனால் மீண்டும் அதிக நேர மின்வெட்டு ஏற்படலாம் என அந்த சபை தெரிவித்து ள்ளது. (5-6)

# தனுஷ்கோடியில் தஞ்சமடைந்த ஏழு இலங்கையர்கள்

(இராமேஸ்வரம்)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி கார ணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் தனுஷ் கோடியில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

குறித்த ஏழு பேரும் மன் னார்ப் பகுதியில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடியை அடைந்துள்ளனர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த 7 பேரையும் மீட்டுள்ள தமிழக பொலிஸார் அவர்களை மண்டபம் காவல் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-6)

# 193 லங்கா சதொச விற்பனை நிலையங்கள் நட்டத்தில்

## கணக்காய்வாளர் திணைக்களம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள 452 லங்கா சதொச விற்பனை நிலையங் களில் 193 விற்பனை நிலை யங்கள் நட்டம் அடைவதாக தெரியவந்துள்ளதாக கணக் காய்வாளர் திணைக்களம் தெரி வித்துள்ளது.

2022ஆம் ஆண்டு தொட ர்பான கணக்காய்வாளர் திணைக்களத்தினால் வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையி லேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் லங்கா சதொச நிறுவனத்திற்கு ஏற் பட்ட இழப்பு 288 மில்லி யன் ரூபாய் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும் இவ் வருடத்தின் கடந்த 10 மாத ங்களில் லங்கா சதொச இலாபம் ஈட்டியுள்ளதாக அதன் தலை வர் பசந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். (5-6)

# கட்டுநாயக்க குடிவரவுத் திணைக்கள கணனி கட்டமைப்பு செயலிழப்பு

## பயணிகள் சிரமம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவுத் திணைக் களத்தின் கணனி கட்டமைப்பு நேற்று முன்தினம் பிற்பகல் செயலிழந்ததால் வெளிநாடு செல்வதற்காக வந்திருந்த பயணிகள் பெரும் சிரமங் களை எதிர்நோக்கியிருந்த னர்.

முறையான பராமரிப்பு இல்லாததால் இந்தக் கட்ட மைப்பு இதற்கு முன்னரும் பல தடவைகள் பழுதடைந்துள் ளது.

இதேவேளை, கட்டு நாயக்கவிலிருந்து சீனாவின் குவாங்சூ நகருக்கு புறப்பட விருந்த ஸ்ரீலங்கன் விமான சேவையின் விமானம் இரத்துச் செய்யப்பட்டதால், பயணிக ளுக்கும் விமான பணியாளர்க ளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்த விமானம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தி லிருந்து சீனாவின் குவாங்சூ சர்வதேச விமான நிலையத் துக்கு பயணிக்கவிருந்தது.

எனினும்,குறித்த விமானம் புறப்பட தாமதமானதால் பய ணிகளை விமான நிலைய த்திலேயே தங்க வைப்பதற்கு ஸ்ரீலங்கன் விமான சேவை அதிகாரிகள் ஏற்பாடு செய்தி ருந்தனர். (5-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 339



“இவருடைய முதுகில் அவன் தான் குத்தினான் என்பதையும் நான் நம்பவில்லை. குத்தியிருந்தால் இவரை மறுபடி தூக்கிக் கொண்டு போய் அந்த ஊமையின் வீட்டில் ஏன் சேர்த்து விட்டுப் போகிறான்?”

“கூட இருந்து பார்த்தது போல் சொல்கிறீர்களே, தேவி! என்னமோ அந்த ஒற்றன் பேரில் உங்களுக்கு அவ்வளவு பரிவு தோன்றியிருக்கிறது. அவனிடம் ஏதோ மாய சக்தி இருக்க வேண்டும். இவர்கூட அவனை இன்னும் தம் சிநேகிதன் என்று சொல்லிக்கொள்கிறார் அல்லவா? எப்படியானால் என்ன? போன உயிர் திரும்பிவரப் போவதில்லை. அவனை இந்த வீரர்கள் கொன்றிருந்தால்.”

குந்தவையின் முகத்தில் வியர்வை துளித்தது. கண்கள் சிவந்தன. தொண்டை அடைத்தது. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. “அப்படி நடந்திராது! ஒருநாளும் நடந்திராது” என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

“இவர் சொல்லுகிறபடி அந்த ஒற்றன் அவ்வளவு கெட்டிக்காரனாயிருந்தால்” என்றாள்.

“ஆம், இளவரசி! வந்தியத்தேவன் இந்த ஆட்களிடம் ஒரு நாளும் அகப்பட்டுக் கொண்டிருக்க மாட்டான்” என்றான் கந்தமாறன்.

“இப்போது அகப்பட்டிராவிட்டால் இன்னொரு நாள் அகப்பட்டுக் கொள்கிறான்” என்றாள் நந்தினி.

குந்தவை பற்களைக் கடித்துக் கொண்டு, “நாளை நடக்கப் போவது யாருக்குத் தெரியும்?” என்றாள்.

பின்னர் ஆத்திரத்துடன், “சக்கரவர்த்தி நோயாகப் படுத்தாலும் படுத்தார் இராஜ்யமே தலைகீழாகப் போய் விட்டது. மூலிகை கொண்டு வருவதற்கென்று நான் அனுப்பிய ஆட்களைப் பிடிப்பதற்கு இவர்களுக்கு என்ன அதிகாரம்? இதோ என் தந்தையிடம் போய்க் கேட்டு விடுகிறேன்” என்றாள்.

“தேவி! நோயினால் மெலிந்திருக்கும் சக்கரவர்த்தியை இது விஷயமாக ஏன் தொந்தரவு செய்யவேண்டும்? என் மைத்துனரையே கேட்டுவிடலாமே? தங்கள் விருப்பம் ஒரு வேளை அவருக்குத் தெரியாமலிருக்கலாம். தெரிவித்தால் அதன்படி நடந்து கொள்கிறார். இந்தச் சோழ ராஜ்யத்தில் இளையபிராட்டியின் விருப்பத்துக்கு மாறாக நடக்க யார் துணிவார்கள்?” என்றாள் நந்தினி.

அந்த இரண்டு பெண் புலிகளுக்கும் அன்று நடந்த போராட்டத்தில் நந்தினியே வெற்றி பெற்றாள். குந்தவையின் நெஞ்சில் பல காயங்கள் ஏற்பட்டன. அவற்றை வெளிக்காட்டாமலிருக்க இளவரசி பெரு முயற்சி செய்ய வேண்டியிருந்தது.

## இருபத்தொராம் அத்தியாயம்
## பாதாளச் சிறை

உலக வாழ்க்கையைப் போல் அறியமுடியாத விந்தை வேறொன்றுமில்லை. சுகம் எப்படி வருகிறது, துக்கம் எப்படி வருகிறது என்று யாரால் சொல்ல முடியும்? வானம் நெடுங்காலம் களங்கமற்று விளங்கி வருகிறது. திடீரென்று கருமேகங்கள் திரண்டு வந்து எட்டுத் திசைகளும் இருள் சூழ்ந்து இடி இடித்து மின்னல் மின்னி ‘கொட்டுகொட்டு’ என்று கொட்டுகிறது. உலகிலிருந்து காற்று என்பதே அற்றுப் போய்விட்டதாகச் சில சமயம் தோன்றுகிறது. மரங்களின் இலைகளும் அசையாமலிருக்கின்றன. திடீரென்று எங்கிருந்தோ ஒரு சூறைக்காற்று வந்து சுழன்று அடிக்கிறது. அதன் வேகத்தில் பெரிய பெரிய மரங்கள் வேருடன் பெயர்ந்து விழுகின்றன. சற்று முன்னால் நேத்ரானந்தமாக வானளாவி நின்று காட்சியளித்த பசுமரச் சோலைகள் இப்போது அனுமார் அழித்த அசோகவனமாக மாறிவிடுகின்றன.

குந்தவையின் வாழ்க்கையில் அத்தகைய சூறைக்காற்று இப்போது சுழன்று அடித்துக்கொண்டிருந்தது. சில காலத்துக்கு முன்பு வரையில் அவள் கவலை என்பதை அறியாதவளாயிருந்தாள். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காவலர்கள் பெற்ற பரிசு

ஒருநாள் சக்கரவர்த்தி அக்பர் தன் சபையில் அமர்ந்திருக்கையில் அவரை நாடி ஓர் இளைஞன் அங்கு வந்தான். அவன் அக்பரை பணிவுடன் வணங்கியபோது, அக்பர் அவனை நோக்கி, “நீ யாரப்பா? உனக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டார்.

“பிரபு! என் பெயர் மகேஷ்தாஸ். நான் ஒரு குக்கிராமத்தில் வசிக்கிறேன். வேலை தேடி உங்களிடம் வந்தேன்.” என்றான் அவன்.

“உனக்கு யார் சொன்னார்கள் இங்கே உனக்கு வேலை கிடைக்குமென்று?” என்று அக்பர் கேட்டார். “என் ஆசிரியர் சொன்னார். பிரபு! என்னுடைய அறிவைக் கண்டு வியந்த அவர் என் தகுதிக்குரிய வேலை உங்களிடம் தான் கிடைக்கும் என்றார். அவருடைய வார்த்தையை நம்பி என் கிராமத்திலிருந்து வெகுதூரம் காலால் நடந்து தங்களைத் தேடி வந்து இருக்கிறேன்” என்றான் மகேஷ்.



“எல்லா ஆசிரியர்களும் தங்கள் மாணவர்களை அறிவாளிகள் என்று தான் நினைப்பார்கள். உண்மையிலேயே நீ புத்திசாதூரியம் உடையவனாக இருந்தால் மட்டுமே உனக்கு வேலை கிடைக்கும்.” என்றார் அக்பர்.

“பிரபு! நீங்கள் எதிர்பார்க்கும் தகுதியை விட நூறு மடங்கு தகுதியுடையவன் நான்.” என்று மகேஷ் பெருமையுடன் கூறினான். “அப்படியானால், அதை நிரூபித்துக்காட்டு.” என்றார் அக்பர்.

“பிரபு! அதைக் காட்டுவதற்கு முன் எனக்கு ஒரு பரிசு தருவீர்களா?” என்று மகேஷ் கேட்டான். “முதலில் உன் சாமர்த்தியத்தை நிரூபித்துக் காட்டு. பிறகு பரிசைப் பற்றிப் பேசு.” என்றார் அக்பர்.

“நான் கேட்கும் பரிசினால் உங்களுக்கு ஒரு பைசா கூட செலவாகாது.” என்றான் மகேஷ். “அது என்னப்பா அப்படிப்பட்ட பரிசு?” என்றார் அக்பர்.

“முப்பது சவுக்கடி கொடுங்கள்.” என்றான் மகேஷ். அவனுடைய அந்த விபரீதமான வேண்டுகோளைக் கேட்டு அக்பர் உட்பட சபையிலிருந்த அனைவரும் திடுக்கிட்டனர். “உனக்கென்ன பைத்தியமா?” என்று அக்பர் கோபத்துடன் கேட்டார்.

“அதைப்பற்றி பின்னால் தெரிந்து கொள்வீர்கள். தயவுசெய்து நான் வேண்டியதைக் கொடுங்கள்.” என்றான் மகேஷ். உடனே அக்பர் ஒரு காவலனைச் சாட்டையெடுத்து வரச் சொன்னார்.

பின்னர் அவன் செவிகளில் “அவனை அடித்து விடாதே. அடிப்பது போல் பாவனை செய்.” என்றார்.

மகேஷ் தன் முதுகைக் காட்டியவாறே அவனை “நீ அடிக்கத் தொடங்கு!” என்றான். அந்த ஆளும் பலமாக அடிப்பது போல் ஓங்கி மெதுவாகவே அடித்தான். பத்துமுறை அவ்வாறு சாட்டையடி பட்டதும் மகேஷ் “நிறுத்து!” என்று கூவினான். பிறகு நிமிர்ந்து அக்பரை நோக்கி, “பிரபு! பரிசில் எனக்குக் கிடைக்க வேண்டிய பாகம் கிடைத்து விட்டது. மீதியிருப்பதை உங்களுடைய பிரதான வாயிற்காப்போர்கள் இருவருக்கும் பகிர்ந்து கொடுங்கள்” என்றான்.

அவன் சொல்வதன் பொருள் புரியாத அக்பர், “என்ன உளறுகிறாய்?” என்று கோபத்துடன் கேட்டார்.

அவர்களையே கூப்பிட்டுக் கேளுங்கள்” என்றான். உடனே அக்பர் அவர்கள் இருவரையும் உள்ளே அழைத்தார். அவர்கள் வந்ததும் மகேஷ் அவர்களை நோக்கி, “தோழர்களே! சக்கரவர்த்தி தரும் பரிசை நாம் மூவரும் பங்கு பிரித்துக் கொள்வோம் என்று உங்களுக்கு வாக்களித்தேன் அல்லவா? என்னுடைய பங்கை நான் பெற்றுக் கொண்டு விட்டேன். இனி நீங்கள் பெறுங்கள்” என்றான்.

இரு காவல்காரர்களும் மகிழ்ச்சியுடன் பரிசை எதிர்பார்க்க, இருவர் முதுகிலும் பலமாக பத்து சாட்டைஅடி விழுந்தது. வலி பொறுக்க முடியாமல் இருவரும் கதற, அக்பர் அவர்களை நோக்கி, “இந்த நிமிடமே உங்களை வேலையிலிருந்து நீக்குகிறேன்.” என்று உத்தரவிட்ட பிறகு மகேஷிடம் “நீ மிகவும் சாமர்த்தியசாலி என்பதை நிரூபித்து விட்டாய். இந்த நிமிடமே உனக்கு பீர்பால் என்ற பெயர் சூட்டி உன்னை இந்த சபையில் உயர்ந்த பதவியில் நியமிக்கிறேன்” என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் உணர்வை இனியேனும் உணர்மினே!

மக்களின் மனங்களை அறிபவனே ஆட்சிக்கு உரியவன். மாறாக, மக்களின் மனங்களை அறியாமல் தான் இட்டதே சட்டம் என்று மமதை கொள்பவன் மக்களால் வெறுக்கப்படுவான்.

இதற்கு இலங்கையில் நடந்த மக்கள் புரட்சி தக்க சான்று.

ஆம், நினைவேந்தலைத் தடுக்கின்றவர்கள், தடுக்க வேண்டும் என்று கொக்கரிப்பவர்கள் மனித வரிசையில் சேர்க்க முடியாதவர்கள்.

இவர்களால் மக்களின் மனங்களை ஒருபோதும் உணரவே முடியாது.

தவிர, தமிழ் மக்கள் என்பதற்காக அவர்கள் இந்த நாட்டின் சிறுபான்மை இனம் என்பதற்காக, அவர்கள் தங்கள் பிள்ளைகளை – உறவுகளை நினைவேந்துவது குற்றம். எனவே அந்த நினைவேந்தலைத் தடுத்தாக வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் ஈனப் பிறவிகளாகவே இருக்க முடியும்.

உண்மை. நினைவேந்துவது மனித உரிமை. அதனைத் தடுக்க யாராலும் முடியாது என்பது மட்டுமல்ல, தடுக்கவும் கூடாது.

எனினும் இந்த நாட்டில் தமிழ் மக்களின் நினைவேந்தும் உரிமையைத் தடுக்க பொலிஸார் முன்னிற்பது அற்பத்தனமானது.

உண்மையில் நினைவேந்துகின்ற உரிமையை யார் தடுத்தாலும் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்து நினைவேந்தல் உரிமையை நிலைநாட்டுவதுதான் பொலிஸாரின் கடமை.

ஆனால் இங்கோ பொலிஸாரே நீதிமன்றங்களுக்குச் சென்று, மாவீரர்களை நினைவேந்துவதைத் தடை செய்ய வேண்டுமென்று நீதிமன்றங்களிடம் கேட்கின்றனர்.

அவ்வாறாயின்; இலங்கைப் பொலிஸார் சிங்களவர்களாக இருப்பதும் அவர்கள் தமிழ் இனத்துக்கு எதிரான இன வன்மத்துடனேயே செயற்படுகின்றனர் என்பதும் இங்கு நிரூபணமாகிறது.

ஆக, இவ்வாறான மனநிலை கொண்ட சிங்களப் பொலிஸார் மீது தமிழ் மக்கள் எந்த வகையில் நம்பிக்கை கொள்ள முடியும்.

பொலிஸ் திணைக்களம், பொலிஸ் சேவை என்றால், அவர்கள் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் சமமாக நடத்த வேண்டும். அதுவே தர்மம்.

ஆனால் இலங்கைப் பொலிஸார் எந்தக் காலத்திலும் தமிழ் மக்களுக்கு எதிராகவே செயற்பட்டுள்ளனர். செயற்பட்டு வருகின்றனர்.

உண்மை. இந்த நாட்டில் காலத்துக்குக் காலம் தமிழினத்துக்கு எதிராகப் பேரினவாதம் இனக்கலவரத்தைத் தூண்டிவிட்ட போதெல்லாம் அந்தக் கொடுமைகளைப் பொலிஸார் நின்று வேடிக்கை பார்த்துள்ளனர் என்பதே வரலாறு.

ஆகவே இந்த நிலைமை மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும்.

ஏனெனில் மக்களின் உணர்வுகள் மதிக்கப்படுவது அவசியம்.

ஆம், நேற்று நவம்பர் 27. தமிழர் தாயகம் எங்கும் மாவீரர்களை நினைவேந்துகின்ற நிகழ்வில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்கின்ற மனநிலை ஆட்சியாளர்களிடம் இருக்குமாயின், இன்றே மாவீரர்களின் நினைவேந்தலை அரசாங்கம் அங்கீகரித்து தமிழ் மக்களின் உணர்வுக்கு உரிய மதிப்பை அளிக்க வேண்டும். இது சமாதானத்தின் முனைப்பாகவும் இருக்கும்.

# உடன் அமுலுக்கு வரும் வகையில்
# ரொஷான் அமைச்சு பதவியிலிருந்து நீக்கம்
## புதிய விளையாட்டுத்துறை அமைச்சராக ஹரின் பெர்னான்டோ

(கொழும்பு)

உடன்அமுலுக்கு வரும் வகையில் ரொஷான் ரணசிங்க விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதோடு புதிய விளையாட்டுத் துறை அமைச்சராக ஹரின் பெர்னான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை உடன் அமுலுக்கு வரும் வகையில் அமைச்சர் பதவி மற்றும் ஏனைய பதவிகளில் இருந்து நீக்கி ஜனாதிபதி கடிதம் அனுப்பியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு சென்றிருந்த போதே விளையாட்டுத் துறை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கும் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்ட பிறகு முதல் முறையாக அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இலங்கையின் புதிய விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக ஹரின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று மாலை சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சுற்றுலாத்துறை அமைச்சுக்கு மேலதிகமாக அவருக்கு இந்த அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி நீர்ப்பாசனத்துறை அமைச்சராக நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். (ம-7)

# வடக்கு, கிழக்கு மக்களின்
# காணிகளை மீள வழங்க நடவடிக்கை
## சபையில் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்ததாக அடையாளப்படுத்தப்படும் அனைத்து இடங்களையும் அவர்களுக்கே மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களின் காணி விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எங்களுடைய வரைபடத்தில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்த காணிகள் இருந்தால் அதனை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஜனாதிபதியின் ஆலோசனையின் படி நான் சமர்ப்பித்துள்ள அமைச்சரவை பத்திரத்துக்கு அமைய அந்த காணிகளை மக்களுக்கே மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார். (ம-7)

# கிளியில் கொலை வழக்கில் பிணையில் வெளிவந்த இளைஞன் சடலமாக மீட்பு

கிளிநொச்சியில் கொலை வழக்கில் பிணையில் வெளிவந்த இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதில் கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஜோன் பிரகாஸ் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ரயில்வே பாதைக்கு அருகில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் கடந்த 31.12.2022 இல் நடந்த கொலை சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

கடந்த மாதம் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் சடலமாக காணப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் அவர்கள் பார்வையிட்ட பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸார் சம்பவம் தொடர்பில் கொலையா அல்லது தற்கொலையா எனவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**

**“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”**

*தியோடர் ரூஸ்வெல்ற்*
*(அமெரிக்காவின் 26 ஆவது ஜனாதிபதி)*

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **புதன்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** சி.இ.சி கல் உடைக்கும் ஆலை, அளுத்வத்த, போகஸ்வேவா, மாமடு கிராமம், மகாகச்சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம் ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

JSAC

“ஆணுக்கு நிகராய் இங்கு பெண்கள் உழைக்கையில் கொடுப்பனவுகளில் மட்டும் ஏன் இந்த பாரபட்சம்? சம கூலி பேணுவோம்! சமத்துவம் காப்போம்.!”

16 2023

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# முன்னணி வீரர்களை தக்க வைத்த சி.எஸ்.கே



2024 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடருக்கு முன்னதாக 8 வீரர்களை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி விடுவித்துள்ளது.

ஐ.பி.எல் 2024 ஆம் ஆண்டுக்கான வீரர்கள் ஏலம் வரும் டிசெம்பர் நடைபெற உள்ளது.

இந்நிலையில் அணிகள் தங்களிடம் உள்ள வீரர்களை தக்க வைத்துக் கொள்ளவும் வீரர்களை விடுவிக்கவும் அல்லது வீரர்களை பரிமாற்றம் செய்து கொள்ளவும் முடியும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

அந்த வகையில் 2024 ஆம் ஆண்டின் ஐ.பி.எல் தொடருக்காக சூப்பர் கிங்ஸ் அணி டோனி, ஜடேஜா, கான்வே, ருதுராஜ் ஆகிய வீரர்களை தக்க வைத்துள்ளது.

ஐ.பி.எல் தொடருக்கு முன்னதாக 8 வீரர்களை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி விடுவித்துள்ளது.

அதில், பென் ஸ்டோக்ஸ், பிரிடோரியஸ், பகத் வர்மா, சுப்ரன்ஷீ சேனாபதி, அம்பத்தி ராயுடு, ஜேமிசன், ஆகாஷ் சிங், சிசண்டா மகலா ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். (5-6)




## 2 ஆவது போட்டியிலும் இந்தியா அசத்தல்



அவுஸ்திரேலியா அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில் இந்திய அணி, 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட குறித்த தொடரில், 2-0 என்ற கணக்கில் இந்தியா அணி முன்னிலை பெற்றுள்ளது.

திருவானந்தபுரத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய கிரிக்கெட் அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 235 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ருத்துராஜ் கெய்க்வாட் 58 ஓட்டங்களையும் ஜெய்ஸ்வால் 53 ஓட்டங்களையும் இசான் கிசான் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 236 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்திரேலியா அணியால் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 191 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், இந்திய கிரிக்கெட் அணி, 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக மார்கஸ் ஸ்டொயினிஸ் 45 ஓட்டங்களையும் மத்தியுவேட் 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 25 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 9 பவுண்ரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட ஜெய்ஸ்வால் தெரிவு செய்யப் பட்டார். (5-6)

## பானுக ராஜபக்ஷவை விடுவித்த பஞ்சாப்

பஞ்சாப் கிங்ஸ் அணி 2024ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடரில் இலங்கையின் பானுக ராஜபக்ஷ உட்பட 5 பேரை விடுவித்துள்ளது.


2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஐ.பி.எல் கிரிக்கெட் தொடருக்கான ஏலத்திற்கு முன்பாக ஒவ்வொரு அணியும் தங்கள் வீரர்களை தக்கவைப்பது, விடுவிப்பது ஆகிய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த ஆண்டில் ஒரு அணியின் பட்ஜெட் ரூ.95 கோடியாக இருந்த நிலையில் தற்போது ஒரு அணியின் பட்ஜெட் ரூ.100 கோடியாக உயர்ந்துள்ளது.

இது ஒவ்வொரு வீரருக்கும் மூன்று வருட ஒப்பந்தத்தின் மூன்றாவது மற்றும் இறுதி ஆண்டாகும். அடுத்த ஆண்டு ஒரு மெகா ஏலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் பஞ்சாப் கிங்ஸ் அணி தக்க வைத்த மற்றும் விடுவித்த வீரர்கள் குறித்த பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.

இதில் இலங்கை துடுப்பாட்ட வீரர் பானுக ராஜபக்ஷ, மோஹித் ரதீ, ராஜ் பவா, ஷாருக்கான், பால் தேஜ் சிங் ஆகியோரும் விடுவிக்கப்பட் டுள்ளனர். ஏனைய வீரர்கள் அனை வரும் தக்க வைக்கப்பட்டுள் ளனர். (5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர்களை...

நீதிமன்றத்திலும் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மற்றும் நெல்லியடிப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திலும், ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பில் நேற்று நடைபெற்ற விசாரணைகளை அடுத்து அந்தந்த நீதிமன்றங்களால் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

அதேவேளை சுன்னாகம், அச்சுவேலி மற்றும் தெல்லிப்பளை பொலிஸாரால் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் கடந்த வாரம் நிராகரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா - தாண்டியடி, தரவை மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

திருகோணமலையில் மாவீரர்களை நினைவேந்த நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுச் சுகாதாரத்துக்கும் பொதுமக்கள் பாதுகாப்புக்கும் பங்கமில்லாமல் மாவீரர் நினைவேந்தலை நடத்தலாம் என்று மூதூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சம்பூர் - ஆலங்குளம் பகுதியில் மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை நீக்குமாறு கோரி மூதூர் நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சட்டத்தரணி டி.ரமணனால் இந்த நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதுடன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் இது தொடர்பில் வாதம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, மாவீரர் நாள் நினைவேந்தலுக்குத் தடை கோரி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 7 பொலிஸ் நிலையங்களால் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களும், மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் கடந்த வாரம் அந்தந்த நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. "இறந்தவர்களை நினைவு கூருவதைத் தடை செய்ய முடியாது.

ஆனால், தடை செய்யப்பட்ட அமைப்பை அல்லது அவர்களை அடையாளப்படுத்தும் கொடி உள்ளிட்ட எதனையும் பயன்படுத்த முடியாது.

பொதுச் சுகாதாரத்துக்கும், பொதுமக்கள் பாதுகாப்புக்கும் பங்கமில்லாமல் உயிழந்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தலாம்" என்று வடக்கு, கிழக்கில் உள்ள நீதவான் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. (ம-7,33,104,250)

## பிரபாகரன் படம்...

இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றுக்கொண்டிருந்தவேளையில் திடீரென விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் தலைவர் பிரபாகரனின் படம் பொறித்த ரீசேட் அணிந்து வந்த இளைஞனால் பரபரப்பு ஏற்பட்டது.

இருப்பினும் நிகழ்வில் குழப்பநிலை ஏற்படாமல் இருப்பதனைக் கருத்திற் கொண்டு விழா ஏற்பாட்டுக் குழுவினர் அஞ்சலி இடத்தில் இருந்து இளைஞனை வெளியேற்றியதுடன் இளைஞனின் பாதுகாப்புக் கருதி அவருக்கு அறிவுரையும் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30)

## மாவீரர்...

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர் தாயகமெங்கும் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நேற்று மாலை 6.05 மணிக்கு ஆலயங்களில் மணியோசை எழுப்பப்பட துயிலும் இல்லங்கள், வீடுகள், பொது இடங்களில் சமநேரத்தில் சுடர் ஏற்றப்பட்டு மாவீரச் செல்வங்களிற்கு தமிழர் தேசம் ஒற்றுமையாக அஞ்சலித்துள்ளது.

நீதிமன்றங்கள் ஊடாக தடைகளை விதித்து மாவீரர் தின நிகழ்வுகளை தடுத்து நிறுத்த பொலிஸார் முயற்சி செய்தனர்.

எனினும் நீதியின் பால் நின்று நினைவேந்தலிற்கு தடை விதிக்க நீதிமன்றங்கள் மறுத்துவிட்டன.

முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் வீதி ஓரத்தில் கட்டப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளை பொலிஸார் அகற்றிய நிலையில் அங்குள்ள மக்கள் பொலிஸாருடன் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

மேலும், சிலரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றிருந்த நிலையில் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே மட்டக்களப்பு தரவை துயிலுமில்லத்தில் நினைவேந்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அங்கு கட்டப்பட்டிருந்த கொடிகள் பொலிஸாரால் பலாத்காரமாக அகற்றப்பட்டிருந்தது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக தடைகள் விதிக்கப்பட்டபோதும் அவற்றினையும்தாண்டி மாவீரச்செல்வங்களிற்கு அஞ்சலித்து தமிழர் தேசம் தனது வரலாற்றுக் கடமையை ஆற்றியிருக்கின்றது. (ம-7,33,60,104,250,285,299,316)

## தரவை...

யுத்தத்தில் உயிர் நீத்த வீரமறவர்களை நினைவுகூர்ந்து வடக்கு - கிழக்கு தாயகப் பகுதிகளில் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில் மட்டக்களப்பு - தரவை மாவீரர் துயிலும் இல்லத்தின் அஞ்சலி நிகழ்வின்இடையே உட்புகுந்த பொலிஸார் அஞ்சலி நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியிருந்தனர்.

அங்கு ஒன்று திரண்டிருந்த மக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உள்ளிட்டோருக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

துயிலுமில்லத்திற்கு சப்பாத்து கால்களுடன் உள் நுழைந்த பொலிஸார், அங்கு கட்டப்பட்ட கொடிகளை அறுத்து எறிந்ததுடன், தீபங்களையும் பிடுங்கி எறிந்தனர்.

பொலிஸாரின் இந்த அராஜக செயற்பாட்டை எதிர்த்து மக்கள் கூக்குரலிட்ட போதும், நிகழ்வினை குழப்பும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும்பொலிஸாரின் கடும் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-7)

# மாவீரர்களுக்கு விளக்கேற்றிய ஆறு பேர் கைது

மட்டக்களப்பு கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்ல செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினரான நிதர்சன் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நினைவேந்தல் நிகழ்விற்காக ஈகச் சுடர் ஏற்றுவதற்காக மாவீரர்களின் உறவுகள் காத்திருந்தபோதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது திடீரென உள் நுழைந்த பொலிஸார் நினைவேந்தல் நிகழ்வினை நடத்துவதற்கு இடையூறு ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் அங்கு அலங்கரிக்கப்பட்ட கொடிகளை அகற்றியுள்ளனர். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2023.11.27
சீட்டிழுப்பு இலக்கம் 137
P 4 9 7 9 0 8 P
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.11.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1341
L 19 50 56 74 L
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
ஜெகபொ Double Chance 44223

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3553
சீட்டிழுப்பு திகதி 27.11.2023
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
C 02 49 75 79
C 77339
தேசிய லொத்தர் சபை

ஹதஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.27
சீட்டிழுப்பு இலக்கம் 0620
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 36 41 61 62 மிதுனம்
33577 26

மஹஜன சம்பத
திகதி 2023/11/27
சீட்டிழுப்பு இலக்கம் 5311
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
X 7 1 0 8 9 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1659
X 12 01 05 17 35
ஜெகபொ Double Chance 40800

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2285 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.11.27 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 31 61 67 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,413,396/-
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
திகதி 27.11.2023 வெற்றி வாரம் 019 வர்ணம் ஊதா
T 4 2 6 0 4 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,376,747.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
திகதி 2023.11.27 வெற்றி வாரம் 4446 வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 09 10 57 72 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,104,504.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3997 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.27 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 53 60 62 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,299,032/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 15 17 23 24 55
1461 பச்சை 2023.11.27 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 470,212,084.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2023.11.27 வெற்றி வாரம் 1977 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 06 25 38 46 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,668,844.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2111
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.11.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,040,480/-
வெற்றி இலக்கங்கள் 10 46 57 58 C
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ஏழாலை தெற்கு
ஸ்ரீ முருகன் பாடசாலையில்
தரம் 5
புலமைப்பரிசில்
பரீட்சையில் தோற்றி
159 புள்ளிகளைப் பெற்ற
திரு.திருமதி
மங்களேஸ்வரன்
சந்திரகுமாரி
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

செல்வன்
**மங்களேஸ்வரன்**
**கோபிஜன்**
(159 புள்ளிகள்)

அவர்களை பாராட்டி
வாழ்த்துவதுடன் அவர்
கல்வியில் மென்மேலும்
உயர்வடைய இறை ஆசி
வேண்டி மகிழ்கின்றோம்.

(18023)

அன்புடன் வாழ்த்தும்

Best Wishes

அப்பா, அம்மா, சகோதரர்கள், அம்மம்மா,
அன்ரா, சித்தப்பா, மாமாமார், அத்தைமார்,
பெரியப்பாமார், பெரியம்மாமார்.


## எள்ளங்குளத்தில் அஞ்சலி



(கரணவாய்)

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் மாவீரர்களுக்கு அஞ்சலிகள் செலுத்தப்பட்டன.

கூர்க்கரும்புலிதிபுநினியின் தந்தையாரான முத்துலிங்கம் சிவப்பிரகாசம் பொதுச் சுடர் ஏற்றி வைத்ததை தொடர்ந்து அங்கு ஈகச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் பெற்றோர்கள் ஆற்றாத் துயரில் கதறி அழுத காட்சி மழைக்கு மத்தியிலும் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

(ம-7.60)


## வேலையாள் தேவை

எமது உணவகத்திற்கு
கொத்து, பராட்டா
போடக்கூடியவரும்
அவருக்கு உதவியாளரும்
உடன் தேவை. (18026)

**077 629 0894**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி முத்துத்தம்பி பாடசாலை
வீதியில் 7ம் ஒழுங்கையில்
மூன்று பக்கமும் பாதைகளுள்ள
நான்கு பரப்பு (04) மேட்டுக்காணி
விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை (18022)

**00393486515906**
**00392526333** இத்தாலி

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில்
1 3/4 பரப்பு வீடு
விற்பனைக்குண்டு

தொடர்பு (18022)

**077 732 6792**

## ENGLISH for Gr. 6 - O/L

P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in Eng.

**NEWTON** Group Classes
18/18, Wyman Road, Nallur.
TP: 077 792 3653 (18007)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7742)

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர்
(இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7742)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## ஆகாஸ் நகை மாடம்


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18013)

**076 825 7716** (ஆகாஸ்)


# மரண அறிவித்தல்



தோற்றம்
20 - 01 - 1936

மறைவு
25 - 11 - 2023

## யோசப் எட்வேட் இராசநாயகம்

**( ஓய்வுநிலை தொழிநுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத் திணைக்களம், நற்கருணைப் பணியாளர் - OLR )**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல.40, மாட்டீன் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் எட்வேட் இராசநாயகம் அவர்கள் கடந்த 25.11.2023 (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் - மரியம்மா தம்பதியரின் மூத்த அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - மேரி யோசேப்பின் (அன்னம்) தம்பதியரின் அன்பு மருமகனும் லூர்தம்மா (ஜெயம்) (Retired Teacher - J/Holy Family Convent) அவர்களின் அருமைக் கணவரும் Dr. கமிலா றஜனி (கனடா), லொறன்சிலா றொஜனி (Teacher - J/St.Mary's Vidyalayam - OLR), றொணிகய் (Coordinator - Development Consultancy) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. சைர்னஸ் யோசப் (கனடா), தர்மபூபதி (Principal - J/Kodikamam Goverment Vidyalayam), தனுஜா (Management Service Officer - Mininstry of Agriculture, NPC) ஆகியோரின் அன்பு மாமனாரும் தூயனா, டிலக்ஷனா, கவின், ஹஷ்மினா ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை (அன்ரோ சொப் உரிமையாளர்), மரியநாயகம் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - மதுவரித் திணைக்களம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.11.2023) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

இல.40, மாட்டீன் லேன்,
யாழ்ப்பாணம். (C-7741)

021 222 9101, 077 358 2704


## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18029)

**071 173 3911,**
**076 853 5022, 076 213 7239**

## பதவி வெற்றிடங்கள்

யாழ். நகரில் இயங்கும் பிரபல மனிதவலு சேவை வழங்கும் ஸ்தாபனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு உடனடி வேலை வாய்ப்புக்கள் உள்ளன. தகைமைக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

1. முகாமைத்துவ உதவியாளர்கள் பெண்கள் (25 வயதிற்கு உட்பட்டோர்) க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
2. உதவி வேலைத்தள முகாமையாளர் (Site Manager) - ஆண்/பெண் (30 - 50 வயதிற்கு உட்பட்டோர்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - ஆண்கள் (20-60 வயதிற்கு உட்பட்டோர்)

தேவையான ஆவணங்கள் - கிராம சேவையாளரின் நற்சான்றிதழ்
தேசிய அடையாள அட்டை பிரதி
கல்வித் தகைமைக்கான சான்றிதழ்களின் பிரதி

(18024)

நேர்முகத் தேர்வு இல.758 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எதிர்வரும் 29.11.2023, 30.11.2023 மற்றும் 01.12.2023ம் திகதிகளில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை நடைபெறும்.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org